போது, முக்கியமான நான்கு காரணங்களைச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. நாங்கள் சோஷலிச நடவடிக்கைகளை மேற்கொண்டதால் கோபம் அடைந்த பிற்போக்குச் சக்திகள் அல்லது அந்த நடவடிக்கைகளைத் தீவிரமாக அமல் படுத்துவதில் தயக்கம் காண்பித்தவர்கள், அந்த நடவடிக்கைகளைத் தீவிரமாக அமலுக்கு கொண்டுவர முயற்சி பண்ணும்போது அந்த முயற்சிகள் வெற்றியை தராது என்ற எண்ணம் கொண்டவர்கள் அளித்த தீர்ப்புத்தான் காங்கிரஸ் தோல்வியடைந்ததற்குக் காரணம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அடிக்கடி குறுக்கிடுவது அவரிடத்திலே உள்ள அருவருப்பாலே அல்ல; அன்பாலேதான் குறுக்கிடுகிறேன். அவர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கக் கூடிய ஆராய்ச்சி காங்கிரஸ் கட்சியினுடைய மேலிடத்திலிருந்து, மத்திய சர்க்காரிலிருந்து கண்ட ஆராய்ச்சிக்கு முற்றிலும் மாறானது. ஹசாரி கமிட்டி ரிப்போர்ட்டைப் படித்துவிட்டு இதைப்பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** இப்படிப்பட்ட முடிவுகளை செயல்படுத்த நாங்கள் எடுத்த தீவிரமான நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டது. அந்த மாதிரியான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கும்போதும் விழிப்புணர்ச்சியோடு இருந்து செயல்பட வேண்டும். அப்படிச் செயல்படாவிட்டால் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் வெளியேற்றப்பட்டுவிடுவீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ள கட்சியாதலால் ஜனநாயக மரபுகளையொட்டி நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லத்தான் வேண்டும். கடந்த காலத்தில் நீங்களும் அதைத்தான் செய்து கொண்டிருந்தீர்கள். அதைச் சொல்லும் போது நீங்கள் கோபப்படக்கூடாது. கோபம் ஒழிந்த முறையில் பேசுவதை . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை ;** கனம் உறுப்பினர் அவர்களுக்கு என்னை ஓரளவு தெரியும் என்று நம்புகிறேன். எனக்குக் கோபப்பட்டுப் பழக்கமே இல்லை.

**திரு. தோ. மு. நல்லசாமி :** இந்த வரவு-செலவுத் திட்டத்திலே, மத்திய அரசின் ஆதிக்கம் மாநில அரசின் மீது இருந்து வருவதற்கு அரசியலமைப்பு வழி செய்கிறது; பதினைந்து ஆண்டுகளாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின்கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மேலும் அந்த ஆதிக்கத்திற்கு வலுவூட்டுவதாக அமைந்திருக்கின்றன, என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலம் நல்லபடியாக வாழ, மாநில மக்கள் நலம் பெற நடைமுறைக்குத் தேவைப்பட்ட அளவுக்குப் பொறுப்பைப் பெற்று கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இன்றைக்கு



அமைந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு மட்டுமல்ல, கடந்த கால அரசும் அவ்வப்போது அந்தப் பிடிப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறது, என்பதைப் பல உதாரணங்கள் மூலம் சொல்லிக் கொள்ள முடியும். பல மாநிலங்களைக் கொண்ட நாடு இது. தேசிய நெருக்கடி, சைனா படையெடுப்பு, பாகிஸ்தான் படையெடுப்பு என்ற சந்தர்ப்பங்கள் வரும்போது அந்த மரபுகளும், நெறிமுறைகளும் மேலும் இறுக்கமாக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டிருக்கலாம். அதனை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிகையாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கப்பட்டால்தான் இன்றைக்கு மாநிலத்திலுள்ள அனைத்துத் தொல்லைகளிலிருந்தும், சங்கடங்களிலிருந்தும் நிவாரணம் கிடைக்கும் என்று சொல்வது மிகைப்படுத்திச் சொல்வதாகும்; எதிர்காலத்திலே வரக்கூடிய கஷ்ட நஷ்டங்களுக்கு அரண் செய்வது போல் இது அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது நாம் கொடுக்க வேண்டிய கடன் பளு ஏறிக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதிகப்படியான கடனை ஏற்றுக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் நம் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய முதலீட்டையும் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தற்போது சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு (அஸெட்ஸ்) இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் கொடுத்த புள்ளி விவரத்தில் கூட அது இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பொருத்தவரை கிராமப் புறங்கள் பற்றி அதிகப்படியாகக் கவனம் செலுத்தப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. நகரத்தில் செய்யப்பட்டிருக்கிற பல வசதிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் கிராமங்களில் பெரும் தொழிலாக இருப்பது விவசாயம். புஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதனால் ஒரு கோடி 60 லட்சம் ரூபாய் வருவாய் குறைகிறது. அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை இருக்கிறது என்று சொல்லக்கூடும். அதே சமயத்தில் முன்பு விவசாய வருமானத்திற்கு வரி 12½ ஏக்கர் வரை இல்லை; 12½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வரியைக் கம்பவுண்ட் செய்து கொள்ள வசதி இருந்தது. இன்றைக்கு எல்லோருமே வரவு-செலவுக் கணக்கு வைத்து வரி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அது விவசாயிகளுக்கு பெரும் தொல்லையாக இருக்கக்கூடும் என்பதை முதலமைச்சர் அவர்களே கூட ஜாக்கிரதையாகச் சொல்லி இருக்கிறார்கள். நான் ஒரு விவசாயி என்ற முறையில், வரவு-செலவுக் கணக்கை ஒழுங்காக வைத்துக் கொண்டு வருவது சிரமமான காரியம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. தோ. மு. நல்லசாமி] [1967 ஜூன் 20

பணப் பயிர்கள் மூலம் ஏராளமான லாபம் வருவதாக ஒரு கருத்து இருந்து வருகிறது. நல்லபடியாக "இன்டென்சிவ் கல்டிவேஷன்' செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஓரளவு பணப் பயிர்கள் பயிரிட்டால்தான் கூட வருமானம் வந்து நல்லபடியாகச் செய்யமுடியும் என்பதை என்னுடைய சொந்த அனுபவத்தில் இருந்து கூற விரும்புகிறேன். வெறும் நஞ்சைப் பயிர் விவசாயிகளுக்குக் காலப் போக்கில் கட்டுபடியாகாது. ஆகவே, பணப் பயிர்களை அவசியமாகச் செய்வது நாட்டினுடைய நன்மைக்காகத்தான். நாட்டினுடைய வளர்ச்சிக்குத் தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டியது அவசியம். நெய்வேலி நிலக்கரி, சேலம் இரும்பு, சேர்வராயன் மலை அலுமினியம் தொழிற்சாலைகள் தவிர மற்றத் தொழிற்சாலைகள் எல்லாம் 'அக்ரோ பேஸ்டு இண்டஸ்ரிஸ்' தான். விவசாயத்தை நம்பித்தான் மற்றத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தென்னாட்டில் கரும்பு பயிரிடுவதற்கு நல்ல சீதோஷ்ண நிலை இருக்கிறது. அதனால் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டு பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதுடன் வருமானம் பெருகியிருக்கிறது. அவை நாட்டுக்குத் தேவை. அதே போன்று நூல் தொழிற்சாலைக்குப் பருத்தி தேவைப்படுகிறது. இந்தப் பயிர்கள் அவசியமாக விளைவிக்கப்பட வேண்டும். கட்டுபடியான வருமானம் இருக்கவேண்டும். கரும்பைப் பொருத்தவரை ஏராளமான லாபம் வந்து கொண்டிருப்பதாக சட்ட மன்றத்தில் உள்ள பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு கரும்பினால் லாபமே இல்லை என்று அறுதியிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே ஆந்திராவில் சர்க்கரை ஆலை வைத்திருக்கக்கூடியவர்களும், விவசாயிகளும் ஒரு மாநாடு கூட்டி விவசாய அமைச்சரை வைத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். 'கரும்பு விலை கட்டுப்படியாகவில்லை; ரூ. 82 வரை மெட்ரிக் டன்னுக்கு கொடுக்கவேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த ஆண்டு கரும்பு பயிர் செய்து வெல்லம் காய்ச்சியவர்களுக்குத்தான் லாபம்; சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுத்தவர்களுக்கு லாபம் இல்லை. மேலும் இதன் விலை ஒரு ஆண்டில் இருப்பதைப் போல் இன்னொரு ஆண்டு இருப்பதில்லை. இன்டென்சிவ் கல்டிவேஷன் செய்வதற்குப் பணப் பயிர்கள் பயிரிடுவது அவசியம் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். இவற்றையெல்லாம் பார்த்து விவசாயிகளுக்கு அதிக உற்சாகம் கொடுக்க வேண்டும். நாட்டிலே உணவுப் பஞ்சம் ஏற்படாமல் இருப்பதற்கு தீவிரமாக உற்பத்தியைப் பெருக்கவேண்டும். இது வரை ஒரு போகம் சாகுபடி செய்து வந்த சி.ஓ. 25 நெல்லுக்குப் பதிலாக இரண்டு குறுவை சாகுபடி செய்வது நல்லது என்று அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் தஞ்சையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.

இருபோகம் செய்வதற்கு விவசாயிகள் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்? எல்லா விவசாயப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கின்றன. விவசாயத்திற்கு வேண்டிய



1967 ஜூன் 20] [திரு. தோ. மு. நல்லசாமி]

பிண்ணாக்கு, உரம் இவற்றின் விலை ஏறியிருக்கிறது. அவற்றை அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் இருந்து வாங்கலாம் என்றால் அங்கு அவை கிடைப்பதில்லை. அதிகம் கொடுத்துத்தான் வெளியே வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அதற்காக கொடுக்கப்படுகிற பணம் ஒன்று. அதற்குரிய ரசீது கொடுக்கப்படுவது குறைந்த பணத்திற்கு. அந்த ரசிதை வைத்துக் கொண்டுதான் கணக்கு எழுதவேண்டும். ஆகவே வருமானவரி ரேட்டை வேண்டுமானால் சிறிது அதிகப்படுத்தலாமே தவிர கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் கணக்கு வைத்துக் கொள்ளத்தான் நேரம் சரியாக இருக்கும். அவர்கள் வேறு ஒரு ஆக்கவேலையிலும் ஈடுபடமுடியாது. அவர்கள் கடன் வாங்குவதற்கும், உப்பு உரம் இவை வாங்குவதற்கும் ஆபீஸ்களுக்கு அலைவதே கஷ்டமாக இருக்கிறது. திருச்சியில் நடைபெற்ற விவசாய கருத்தரங்கில் மாற்றுக் கட்சித் தோழர்களாக இருந்தாலும் அவர்களும் இக்கருத்தை எடுத்துக் கூறினார்கள், விவசாயிகள் காரியாலயங்களில் படும் துன்பங்களை. விவசாயிகளுக்கு என்னதான் கஷ்டங்கள் இருந்தபோதிலும் கட்டுப்பாடான விலைக்கு கொள்முதல் செய்துதான் ஆக வேண்டும் என்ற கொள்கையை எங்கள் கட்சியும், இப்போது இருக்கிற ஆளும் கட்சியும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், ஒத்துழைக்கிறோம். ஆனால் உணவுப் பொருள் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் உற்சாகம் குறைந்து போய்விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

வியாபாரிகளை எடுத்துக் கொண்டால் 50,000 ரூபாய் வரை சேல்ஸ் டாக்சில் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம் என்பதை 75,000 ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் 12½ ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு கீழ் உள்ளவர்கள் கணக்கு வைக்க வேண்டாம் என்றிருந்த நிலையை மாற்றி எல்லோருமே கணக்கு வைக்கவேண்டும் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நான் முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இது விவசாயிகளுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தும், ஆகவே, இதை வற்புறுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதி சம்பந்தப்பட்ட ஒரு சில திட்டங்களை நெடு நாட்களாக கேட்டுக்கொண்டு வருகிறோம். மராமத்து துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் என் சக உறுப்பினராக கரூர் பகுதி அங்கத்தினராக இருந்த காலத்தில் நொய்யல், கொடகனாறு திட்டத்தை வற்புறுத்தி வந்திருக்கிறேன். இன்று அவர்கள் அந்த இலாகா அமைச்சராக வந்திருக்கிறார்கள். அதிலுள்ள சிரமங்கள் பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும். நொய்யல் நதியைப் பொறுத்தவரையில் லோயர் பவானி கழிவுத் தண்ணீர் வருகிறது. அதை வைத்து 20,000 ஏக்கருக்கு பாசனத்திற்குக் கொடுக்கலாம் என்றிருந்தது. இப்போது பரம்பிக்குளம்—ஆளியாறு கழிவுத் தண்ணீரும் வருவதால் அதிகத் தண்ணீர் பெற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அது நல்லதொரு திட்டம். அதைச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கரூர்

[திரு. தோ. மு. நல்லசாமி] [1967 ஜூன் 20

பகுதியில் உள்ள விவசாயிகள் விவசாயத்தில் நல்ல ஆர்வம்
உடையவர்கள். அவர்களுக்கு அத்திட்டத்தை நிறைவேற்றிக்
கொடுக்கவேண்டும். பாப்புலர் முதலியார் வாய்க்காலினால் 1,500
ஏக்கருக்கு பாசன வசதி அளிக்கமுடியும் என்று அமைச்சர்
அவர்களிடம் கருத்தரங்கில் கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்தக்
கால்வாய்க்கு ஆண்டுக்கு எட்டு மாதங்களுக்குத்தான் தண்ணீர்
கொடுக்கமுடியும் என்று சொன்னார்கள். காவேரியில் ஏராளமான
தண்ணீர் வருகிறது. இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.
அமராவதி வாய்க்காலில் ரீ மாடலிங் சப் டிவிஷன் போட்டு அந்த
வாய்க்கால்களை சீர்திருத்தம் செய்வதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்
பட்டு அதுவும் தேங்கிக் கிடக்கிறது. அதையும் நிறைவேற்ற
வேண்டும்.

கரூர் நகரம் நெசவாளர்கள் கொண்ட நகரமாகும். நூல்
விலையேற்றம், அல்லது பற்றுக்குறை இவை காரணமாகவும் அவர்
களுக்கு வேண்டிய சாயப் பொருள்கள் கிடைக்காத காரணத்தி
னாலும் அத்தொழில் சிறப்பாக நடக்கமுடியாத சூழ்நிலை
ஏற்பட்டிருக்கிறது. அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் அது
குறித்து அரசாங்கத்திற்குத் தெரிவித்து எனக்கும் நாக்கல் செய்
திருக்கிறார்கள், அதையும் கவனிக்க வேண்டும். கூட்டுறவு அடிப்
படையில் நூற்பாலையின் தலைவன் என்ற முறையில் நான் ஒரு
கருத்து கூற விரும்புகிறேன். ஏராளமான முதல் போட்டு தொழில்
செய்கிறார்கள் என்றாலும் மூன்று ஷிப்ட்ஸ் ஏற்படுத்த முடியாத
நிலையில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. தரிசு நிலங்களை
சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டும். தொழிற்சாலைகள் எந்த
அளவிற்கு சக்தியோடு இயங்கமுடியுமோ அந்த அளவிற்கு இயங்க
வேண்டும் என்ற நல்ல கருத்தை இந்த அரசும் கொண்டிருப்பதால்
மூன்று ஷிப்ட்கள் ஓடுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர
வேண்டும். எங்கள் ஆலை மூன்றாவது ஷிப்டில் ஓட முடியாத நிலை
இருக்கிறது. சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்பது ஆலைகளும்
அந்த நிலையில்தான் இருக்குமென்று நம்புகின்றேன். ஆகவே,
அந்த ஆலைகளுக்கு போதிய நிதி வசதி போன்ற வசதிகளைத் தந்து
அவைகளில் மூன்று ஷிப்ட்கள் இயங்குவதற்கு ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்
கிறேன். வணக்கம்.

பிற
பகல்
12-36
* திருமதி வி. ப. பழனியம்மாள்: சட்டமன்றத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் வரவு
செலவு ஆண்டு அறிக்கையின்கீழ் பேச எனக்கு வாய்ப்பளித்த
மைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நமது பொருளாதாரத்தின் இடர் மிகுந்த சூழ்நிலையிலும் மாநிலத்
திட்டங்களுக்குரிய மத்திய உதவி பெரிதும் குறைக்கப்பட்
டிருந்தும் பேரறிஞர் அண்ணா அவர்கள் இயன்ற வரை கூடுதல்
நிதி ஒதுக்கம் செய்து வரவு செலவு ஆண்டு அறிக்கையை நம் முன்
சமர்ப்பித்திருப்பது பாராட்டத் தக்கதாகும். தேர்தல் காலத்தில்
கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் மாநில



1967 ஜூன் 20] [திருமதி வி. ப. பழனியம்மாள்]

முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றுவதிலும் நமது
அமைச்சரவை தீவிரமாக செயல்பட்டு வருகிறது. அதற்காக இரவு
பகல் பாராது ஓயாது அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
நமது உணவு அமைச்சர் அவர்கள், அமைச்சரவையை ஏற்படுத்திய
இரண்டு மாதங்களுக்குள் ஒரு படி அரிசித் திட்டத்தை கோவை
மாவட்டத்திலும், சென்னை மாநகரத்திலும் செயல்படுத்திவிட்டார்
கள். விரைவில் தமிழகம் முழுவதிலும் இத்திட்டத்தைக் கொண்டு
வருவதற்கு அவர்கள் அயராது உழைத்துக் கொண்டு வருகிறார்கள்.
நம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பஸ் போக்கு
வரத்தை நாட்டின் உடைமையாக்க தீவிரமாக இருக்கிறார்கள்.
அமைச்சர் பதவி ஏற்றவுடனேயே பஸ் கட்டணங்களை குறைத்து
விட்டார்கள். விவசாயத் துறையில் என்ன குறைகள் இருந்தாலும்
உடனுக்குடன் நிவர்த்திக்கப்படுகிறது. விவசாயிகளின் குறை
களைத் தீர்ப்பதில் நமது அமைச்சர் அவர்கள் தீவிரமாக செயல்
பட்டு வருகிறார்கள். மருத்துவத் துறையிலும் அவ்வாறே.
அமைச்சர் எதிர்பாராத நிலையில் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும்
சென்று சோதனையிடுவதால் முன்பு கவனிப்பாரற்றுக் கிடந்த
இடங்களிலெல்லாம் இப்பொழுது ஒழுங்காக நல்ல முறையில்
மருத்துவம் செய்யப்படுகிறது. தாழ்த்தப்பட்டோர் நல இலாகா
வைப் பற்றி கூறவே வேண்டியதில்லை. பேரறிஞர் அண்ணா அவர்
கள் உள்ளத்தில் எப்படி தாழ்த்தப்பட்டோருக்கு தனியிடம்
உள்ளதோ அவ்வாறே அவரது அமைச்சரவையிலும் இடம் இருக்
கிறது. நமது அமைச்சரவை ஒரு படி அரிசித் திட்டத்தை மா
நிலம் முழுவதும் அமுல்படுத்த இருக்கிறது. அதைப்போலவே
நெசவாளர்களின் குறைகளை ஆராய்ந்தால் நலமாக இருக்கும்
என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். பெரும்பாலும் நம்
கிராமங்களில் விவசாயிகள், நெசவாளிகள்; கூலி ஆட்கள் இருக்
கிறார்கள். இவர்களில் சில சமயங்களில் கூலியாட்களுக்கு
தானியங்களை ஊதியமாகக் கொடுக்கிறார்கள். ஆனால் நெசவாளி
களுக்கு உணவு தானியங்கள் ஊதியமாகக் கிடைப்பதற்கு வழியே
இல்லை. ஆதலால் கிராமங்களில் முதலில் நெசவாளர்களுக்கு
ரேஷன் முறையைச் செயல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

புன்செய் நிலத்திற்குரிய நிலவரித் தீர்வையை ரத்து செய்தது
மிகவும் வரவேற்கத் தக்க செய்தியாகும். விளைச்சலில்லாத புன்
செய் நிலங்களுக்கு நில வரி கொடுக்க விவசாயிகள் மிகவும்
துன்பப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய குறையை
நிவர்த்தி செய்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு விவசாயக்
குடும்பங்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாவார்கள்.
எங்கள் கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் குறிப்பாக
தாராபுரம், காங்கேயம், வெள்ளக்கோவில் பகுதிகளில் புன்செய்
நிலங்கள்தான் அதிகம். தாராபுரம் தொகுதியைச் சேர்ந்த உடு
மலை வட்டம், குடிமங்கலம், மடத்துக்குளம் ஆகிய இடங்களில்
பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டம் இருக்கிறது. ஆனால்
போதிய அளவு வாய்க்கால்கள் வெட்டிக் கொடுக்கப்படவில்லை.

[திருமதி வி. ப. பழனியம்மாள்] [1967 ஜூன் 20

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு திட்டமிடப்பட்டிருந்தும்
வாய்க்கால் வெட்டாததாலும், ஆயக்கட்டில் நிலங்கள் சேர்க்கப்
படாததாலும் தரிசாகக் கிடக்கிறது. விவசாயத்திற்கு முக்கியத்
துவம் அளிக்கும் நம் அரசு அதை நிறைவேற்றிக் கொடுக்கும்படி
கேட்டுக்கொள்கிறேன். இது தவிர இன் விவசாயத்திற்கு
இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கு
மாறு கேட்டுக்கொள்கிறேன். சில சமயங்களில் அறுவடை சமயத்
தில் பயிர் நோயாலோ, பூச்சிகளாலோ, வெறுளிதங்களிலோ
கெட்டுவிடுகிறது. அதிகப் பணம் செலவழித்து பயிர் செய்தவர்
களுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. அப்படிப்பட்ட
சமயங்களில் இன்ஷூரன்ஸ் மூலம் உதவி கிடைத்தால் அடுத்த
பயிர் விளைச்சல் செய்வதற்கு உதவியாக இருக்கும். மேலும்
மற்ற துறைகளில் உள்ளவர்களைப் போல், விவசாயத் துறை
யில் உள்ளவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளும்படியான நிலையில்
இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையில் எங்கள் மாவட்டத்தில்
புதிய மருத்துவக் கல்லூரிகட்டவும், கருவிகள் பொருள்கள் வாங்க
வும், நிதி ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து நாங்கள் அனைவரும்
அறிஞர் அண்ணா அவர்களுக்கும், எங்கள் சுகாதார அமைச்சர்
அவர்களுக்கும் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும், சீரணித் திட்டம் வரவேற்கக் கூடிய திட்டமாகும்.
தன்னலம் கருதாது பிறருக்காக உழைக்கும் பயிற்சியும், மனப்
பக்குவமும் அளிக்கும் இந்தத் திட்டம் சிறந்த திட்டமாகும்.
தனது சீரிய தொண்டினால் நாட்டையும் நலப் படுத்த சந்தர்ப்பம்
ஏற்படுகிறது.

கலப்பு மணத்திற்கு ஆதரவு கொடுப்பது வரவேற்கத் தக்க
செய்தியாகும். இது வரையில் சமூகச் சீர்திருத்தம், கலப்பு மணம்,
ஜாதி வேறுபாடுகளை ஒழிப்பது எல்லாம் பேச்சளவில் தான்
இருந்தது. செயலளவில் எதுவும் இல்லாமல் இருந்தது. கலப்பு
மணம் செய்து கொள்வோர் உற்றார், உறவினர், மற்றோர் எல்லோ
ராலும் புறக்கணிக்கப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு ஆதரவு
கொடுக்கும் அண்ணாவின் திட்டம் வரவேற்கக் கூடிய திட்டம்.

நிர்வாகத் துறையில் புதிதாக ஈடுபட்டிருந்தாலும் இந்த அறிக்
கையை நல்ல முறையில் தயாரித்து அளித்துள்ள அண்ணா அவர்
களை மறுமுறையும் பாராட்டி எனது உரையை முடித்துக்
கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்** : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் 1967--68-ம்
ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து இங்கு சமர்ப்
பித்திருப்பதைப் பற்றிப் பலரும் கருத்துக்களைச் சொல்லியாகி
விட்டது. இந்த அறிக்கையிலே குறிப்பாக ஏழை மக்களுக்குக்
குறைந்த விலையிலே அரிசி கொடுப்பதற்கும், புன்செய் நிலங்
களுக்கு நிலவரி வஜா செய்வதற்கும் ஏற்பாடு செய்திருப்பது வர



1967 ஜூன் 20] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

வேற்கத் தக்கது. அதிலே சில குறைபாடுகள் இருப்பதையும், சில மாறுதல்கள் தேவை என்பதையும் எங்களைப் போன்றவர்கள் கருத்துக்கு எட்டியதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நாம் இப்போது கொள்முதல் செய்வதெல்லாம், குறிப்பாக, நெல். இந்த நெல் விளையக் கூடிய நன்செய் நிலங்களுக்கு முதலில் விதிவிலக்குக் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். புன்செய் நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுப்பதாக இருந்தாலும், விதி விலக்கானது எவ்வளவு தூரம் அவர்களுக்கு உபயோகமாக இருக்கிறது என்பதை மிக மிகச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சாதாரணமாக ஏக்கருக்கு 8 அணா, 1 ரூபாய், 1½ ரூபாய் தான் புன்செய்க்கு வரி—2 ரூபாய்க்குக் குறைவாகத் தான் இருக்கிறது வரி. குறிப்பாக ஒருவன் 5 ஏக்கர் நிலம் உடையவன் என்றாலும்கூட அவனுக்குக் கிடைக்கக் கூடிய வரி நிவாரணம் அவன் ஒரு ஜதை வேஷ்டி வாங்கும்போது கொடுக்கும் வரியை விடக் குறைவுதான். அவன் விவசாய வருமான வரி அதிகாரிக்குக் கணக்குக் கொடுப்பதன் மூலம் அனுபவிக்கக் கூடிய தொல்லையைப் பற்றி கவனிக்கும்போது, வரி நிவாரணத்தினால் கிடைக்கும் சந்தோஷம் போய் அவனை சொல்லொணாத் தொந்தரவிலும் சங்கடத்திலும் கொண்டு போய்விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

நில வருமான வரி ஏற்கெனவே இருக்கிறது. பன்னிரண்டரை ஏக்கருக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. நூற்றறுபது லட்சம் ரூபாயைச் சரிக்கட்டும் முறையிலே இப்போது மாற்றம் செய்திருக்கிறார்கள். இதர நிலங்களுக்கு வருமான வரி விதிக்கும்போது அதைக் கணக்கிட்டு, அதற்குக் குறையாமல், கொஞ்சம் சேர்த்து வேண்டுமானாலும் கம்பவுண்ட் முறையிலே, உடன்பாடு முறையிலே விதித்தால் நன்றாக இருக்கும். அவ்வாறு இல்லாமல் கணக்குக் கொடுக்கும்படி வைத்தால் வருமானத்தை வசூல் செய்வதில் வரியாக கொடுக்கக்கூடியதைவிட அதிகச் செலவும் ஏற்பட்டு, விவசாயிகள் பன்மடங்கு கஷ்டமும், துன்பமும் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். நான் பருத்தி விளைவிக்கிறேன். ஒரு ஏக்கரில் 10 பொதிகள் விளையும். பக்கத்தில் ஒரு விவசாயி 2 பொதி எடுப்பான். அவனுக்கு தகுந்த சமயத்தில் பூச்சி மருந்துகள், கருவிகள் கிடைக்காமல் போய் வேளாண்மை அத்தனையும் வீழ்ந்து விடும். விவசாய வருமான அதிகாரியிடம் போகும்போது, பக்கத்திலுள்ள காணியில் உள்ளவன் 10 பொதி என்று கொடுத்திருக்கும்போது, இவனுடைய நிலத்திலே 2 பொதி தான் என்று சொன்னால், அந்த அதிகாரியை எப்படி நம்ப வைப்பது? இது மிக மிகச் சிரமமான வேலை. நான் முதலமைச்சர் அவர்களைப் பாதம் பணிந்து கேட்டுக்கொள்வது என்னவென்றால்,

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] 1967 ஜூன் 20]

'விவசாயிகள் வரி கொடுக்கத் தயாராக இருப்பார்கள்; வாங்கிக் கொள்ளுங்கள்; ஆனால் கம்பவுண்ட் முறையில் கொஞ்சம் கூடுதலாக வாங்கிக் கொண்டாலும் பரவாயில்லை; குடியானவன் கணக்கு எழுதி, ஆடிட்டர், அக்கவுண்டண்ட் ஆகியவர்களிடம் போய், அதிகாரிகளிடம் போய் காலம் நேரம் எல்லாவற்றையும் பாழாக்காமல் அவர்களைக் காப்பாற்றவேண்டும்' என்பது தான்.

அடுத்தபடியாக, ஒரு படி அரிசித் திட்டம் இருக்கிறதே, அது அடி மட்டத்திலிருந்து வந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். முதலில் நகரங்களுக்குக் கொடுத்து, படிப்படியாக கிராமங்களுக்கு விஸ்தரிப்பதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. முதலில் கிராமங்களுக்குக் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும். கிராமங்களில் தான் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். கிராமங்களில் விவசாயத் தொழிலாளிகளைப் போல கைத்தறித் தொழிலாளிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் மிகக் குறைந்த வருவாய் உள்ளவர்கள். உண்மையிலேயே நகரங்களில் உள்ளவர்களின் வருவாயையும், கிராமங்களில் உள்ளவர்களின் வருவாயையும் ஒத்துப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கும். உயர்ந்த வருவாய் உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கொடுக்கப்படுகிறது. குறைந்த வருவாய் உள்ளவர்கள் அதிக விலையில் வாங்கிச் சாப்பிட வேண்டியிருக்கிறது. முதலில் அடி மட்டத்திலிருந்து ஏற்பாடு செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். அதிலும், இந்தக் குறைந்த விலையில் அரிசி கொடுப்பதால் ஏற்படுகிற விளைவுகளை ஏற்பதற்கு அதிக விலைக்கு வாங்கிச் சாப்பிடுகின்றவர்களும் ஆளாக்கப்படுகிறார்கள். விற்பனை வரி போன்ற வரிகள் வாயிலாக வாய்ப்பும் வசதியும் அற்றவர்கள் அதிக விலைக்கு வாங்குவதால் ஏற்படுகிற நஷ்டத்தையும் அவர்கள் பகிர்ந்துகொள்ளவேண்டியிருக்கிறது. இதைச் சிந்திக்க வேண்டும்.

அதிலும், கிராமத்தில் உள்ளவர்களின் வருவாய் மிகக் குறைவாக இருப்பதால் அவர்கள் நகரத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். நகரத்தை எடுத்துக் கொண்டால் வரக் கூடிய வருவாயும் அதிகம்; குறைந்த விலையில் தானியங்களும் கிடைக்கின்றன. எங்களைப் போன்ற விவசாயிகள் வயலில் வேளாண்மை செய்து அறுவடை செய்ய முடியாமல், அறுவடை செய்வதற்கு ஆள் கிடைக்காமல் அவதிப் படக்கூடிய நிலைமை இருக்கிறது. நகரப்புறத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அளவுக்கு கூலி கொடுக்க எங்களால் முடிவதில்லை. உண்மையிலேயே தானியங்கள் கொள்முதல் செய்வதிலே எந்தவிதமான கணக்கையும் முந்திய ஆட்சியாளர்கள் பார்த்து ஒழுங்குபடுத்தவில்லை. இந்த ஆட்சியாளர்களாவது அதை அவசியம் எனக் கருதி அதைப்பற்றிப் பரிசீலித்து மேற்கொண்டாகவேண்டும். தானியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகள் 4-5 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட விலைகள். அம்மோனியம் சல்பேட் 30



1967 ஜூன் 20] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

ரூபாயாக இருந்தது, சென்ற ஆண்டு 40 ரூபாயாக ஆகி, இந்த ஆண்டு 50 ரூபாயாக இருக்கிறது. அந்த 50 ரூபாய்க்குக் கிடைக்காமல் 80 ரூபாய்க்குக் கள்ள மார்க்கட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. இந்த மூன்று ஆண்டுகளில், 30 ரூபாயாக இருந்தது 50 ரூபாயாக உயர்ந்திருக்கும்போது, அந்த விலைக்கு தானியத்தைக் கொடுப்பது மிக மிகக் கஷ்டம்தான். அவர்களுக்கு இந்தச் சிரமத்தைப் போக்க வழியும் வகையும் செய்ய வேண்டும்.

அதோடு நான் ஒரு சின்ன உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். நகரங்களில் தொழிலில் முதலீடு செய்கிறார்கள். தொழிலில் ஒரு லேத் வாங்கினால், 7,000 ரூபாய் அல்லது 10,000 ரூபாய் போட்டு ஒரு சாதனத்தை வாங்கினால் மணிக்கு 5 ரூபாய் ஆதாயம் எதிர்பார்க்கிறார்கள். மாதத்திற்கு 1,000 ரூபாய் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். இது குத்து மதிப்பல்ல—சரியான கணக்கு. நிபுணர்கள் வைத்திருக்கிறவர்கள் பல மடங்கு அதிகம் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அதே விலையுள்ள ஒரு ஏக்கர் பூமியை வைத்துக்கொண்டு, குடும்பத்தோடு பாடுபட்டு வேளாண்மை செய்கின்றவர்களுக்கு, மூலதனத்தில் 12-ல் ஒரு மடங்கு, ஒரு ஆண்டுக்கு ஓராயிரம் ரூபாயாவது கிடைக்க வேண்டாமா? நகரத்தில் ரூ. 10,000 மூலதனம் தொழிலில் போட்டவர்கள் மாதத்திற்கு ரூ. 1,000 எதிர்பார்க்கிறார்கள். வேளாண்மை செய்பவன் ஆண்டுக்கு ரூ. 1,000 எதிர்பார்ப்பதில் என்ன தவறு. அவன் போடுகின்ற மூலதனம், குடும்பத்தின் உழைப்பு அனைத்திற்கும் சேர்த்து கணக்கைப் பார்த்தால், அவன் தானியத்தை விற்பதில் அவனுக்கு 12-ல் ஒரு மடங்கு வருமானம் கிடைக்கிறதா என்று தயவு செய்து கணித்து, பிறகு விலை நிர்ணயம் செய்வது நலமாக இருக்கும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தானியங்களுக்கு விலை நிர்ணயிக்கப்படும்பொழுது, நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களுக்கும் கிணற்றுப் பாசனத்தின் மூலம் உற்பத்தி செய்கின்ற இடங்களுக்கும் வேறுபாடு காட்டப்படுவதில்லை. எங்களுடைய பகுதியில் கிணறுகளைப் பார்த்தால் 130 அடி ஆழம் போகும். கோவையில் 100 அடி ஆழத்திற்கு மேல் தான் கிணறுகள் இருக்கும். வெளியிலிருந்து கிணறுகளை எட்டிப் பார்த்தாலே பயங்கரமாக இருக்கும், அவ்வளவு ஆழம் இருக்கும். ஒரு கிணறு வெட்டுவதற்கு ரூபாய் 25,000 செலவாகும். இவ்வளவு செலவு செய்து கிணறு தோண்டி, மின்சார சாதனங்களைப் பொருத்தி, அதற்கான செலவையும் ஏற்று, மின்சாரத்தை உபயோகப்படுத்துவதினால் ஏற்படும் செலவையும் சேர்த்துப் பார்த்தால் ஏராளமான செலவு ஆகும். இவ்வளவு கஷ்டப்பட்டு, ஏராளமாகச் செலவு செய்து உற்பத்தி செய்தால், தானியத்திற்குத் தகுந்த விலை கிடைக்கவில்லையென்றால், தங்கள் சொந்த உபயோகத்திற்கு மட்டும் உற்பத்தி செய்வதோடு நிறுத்திக் கொண்டு, விற்பனைக்கு உற்பத்தி செய்வதை அடியோடு கைவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்

களுக்கு ஒரு சலுகை கொடுத்து, இந்த ஏற்றத் தாழ்வை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்த நிலைமையை கவனியாது, அதிகாரம் கையில் இருக்கிறது என்று எப்படியாவது குறைந்த விலைக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைத்தால், பின்னால் அதன் விளைவு என்ன ஆகும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு வடநாட்டு பயறு, பருப்பு முதலியவைகளையெல்லாம் ரூ. 50-க்கு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் கொள்முதல் செய்து ரூ. 100-க்கு மேற்பட்ட விலைக்கு விற்றார்கள். அதன் பலன் என்னவென்றால், விவசாயம் செய்பவர்களின் அக்கறையை அது அழித்துவிட்டது, ஒழித்துவிட்டது. உற்பத்தி குறைந்து, அதன் பலனாக; இன்றைக்கு ஒரு மூட்டை ரூ. 200-க்கு விற்கப்படுகிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே, இம்மாதிரி செய்தால், உற்பத்தி செய்பவர்களுக்கு ஊக்கம் குறைந்து, உற்பத்தி குறைந்துவிடும். பெரிய அகப்பையை போடுவதற்கு முன்னால், சட்டிக்கு அதிகமாய், பெருவாரியாகக் கிடைக்க வழிவகை செய்து, அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நீண்ட நாட்களாகப் பற்றுக்குறை பட்ஜெட் போட்டு, வரவுக்கும் மிஞ்சிய செலவு செய்து, இன்று நமது வருவாயிலே கால் பங்கு வட்டிக்காகக் கொடுக்கிற நிலைக்குக் கொண்டு வைத்து விட்டிருக்கிறார்கள். வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து, வேண்டாத இனங்களுக்காகச் செலவு செய்து, இன்றைக்கு நாட்டில் வருவாய்க்கு ஒவ்வாத நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய பகுதி மிகவும் பாராட்டத்தக்கது என்பதை யாரும் மறுக்க முடியாது. கடனும் வாங்கி, வரியையும் போட்டு, அந்த ரூபாயை வருவாய் வரக்கூடிய இனங்களில் அல்லாமல், மற்ற வேண்டாத இனங்களில் செலவழித்துவிட்டு திணறிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கண்ணோட்டத்தைக்கொண்டு வருவாய்க்கு அதிகமாகாமல், வருவாய்க்கு உட்பட்ட அளவிலேயே இந்தத் திட்டத்தைத் தீட்டியிருந்தால் இன்னும் மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் பல இனங்களிலும் செலவைக் குறைப்பதற்கான வழிகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்துச் செய்திருந்தால் மிகவும் நலமாக இருக்கும். ஆட்சியாளர்கள் வள்ளுவர் வகுத்த வழியில் சென்று கொண்டிருப்பவர்கள். ஆகவே,

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை,"

என்ற வள்ளுவர் வாக்குப்படி அறிஞர்கள், அறிந்தவர்கள் நன்றாக சிந்தித்து செயலாற்றுவார்கள் என்று கருதுகிறேன். வருகிற வழி



குறைந்தாலும் பரவாயில்லை, போகிற வழி பெரிதாக இருந்தால் அதை அடைக்க வேண்டும் என்னும் வள்ளுவர் மொழிப்படி ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இனி, வரி போட்ட வகையிலே மத்திய சர்க்கார் எத்தனையோ தவறுகளை வழக்கம்போல் இந்த வருஷமும் செய்துகொண்டு வந்திருக்கிறது. சிகரெட், குடிவகைகள் இவைகளின் மீது ஏராளமாக வரி போட்டிருக்கிறார்கள். இங்கேயும் சாதாரணமாக விற்பனை வரியை ஏற்றுவதற்குப் பதிலாக சினிமா போன்ற வகைகளில் வரியைக் கூட்டியிருந்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏற்கனவே வரி அதிகமாக இருக்கிறது. எதற்குத் தான் வரி இல்லாமல் இருக்கிறது? ஆகவே, தேவையுள்ளவர்கள், வசதி உள்ளவர்கள் வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் அதிகம் கொடுக்கலாம் அல்லது ஒரு நேரக் காட்சியைப் பார்க்காமல் விட்டுவிடலாம்.

அடுத்து, இந்தக் காதி இலாகாவை உள்ளபடியே எடுத்துவிடுவது மிகவும் நல்லது. இந்தக் கதர் இலாகாவினால் நம் நாட்டிற்கு வருகிற கேட்டை எவ்வளவு பன்னிப்பன்னிச் சொன்னாலும் தீராது. உணவுக்கு அடுத்தபடி இன்றியமையாதது உடை. பஞ்சு பற்றாக்குறை ஏற்பட்டு, நாம் பஞ்சை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அன்னியச் செலவாணி பற்றிய கஷ்டமும் நாம் அனைவரும் அறிந்ததே. பஞ்சுக்காக வெளிநாடுகளைக் கெஞ்சிக் கொண்டிருக்கிறோம். மூன்று மில் வேஷ்டிக்கு ஆகவேண்டிய பஞ்சு ஒரு கதர் வேஷ்டிக்குத் தேவைப்படுகிறது. ஒரு மில் வேஷ்டி கிழிவதற்குள் மூன்று கதர் வேஷ்டிகள் கிழிந்துவிடுகின்றன. ஆகவே, 12 மடங்கு மூலப் பொருள் நாசமாக்கப்படுகிறது. உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலை கிடைக்காமல், சப்ஸிடி, சப்ஸிடி என்று ஏராளமாகப் பணத்தைக் கொட்டி வருகிறோம். அமைச்சர் அவர்கள் பாவுக்கும், ஊடுக்கும் இடையே வெவ்வேறு நூல்களைப் போட்டு, இப்படி பல பித்தலாட்டங்கள் நடப்பது பற்றியும் குறிப்பிட்டார்கள். இடது புறமாக்கேற்றி கதரைப் போல போலித் துணிகள் நெய்கிறார்கள். இப்படி பல பித்தலாட்டங்கள் நடக்கின்றன. நமக்கு ஏற்கனவே பஞ்சு பற்றாக்குறையாக இருக்கிறது. வேண்டாத இனங்களில் இப்படி பணத்தை அனாவசியமாக செலவழிப்பதில் பயனில்லை. நான் இந்த இலாகாவைப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. இந்த இலாகாவைச் சேர்ந்தவர்களே இந்த ஊழல்களைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த இலாகாவே தேவையில்லை. இந்த இலாகாவில் 3.000 பேர்கள் வேலை செய்கிறார்கள். அத்தனை பேர்களையும் வேலையில்லாமல் எங்கே போகச் சொல்வது? அவர்கள் கதி என்ன ஆவது? என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மூலதனம் வளர்ந்து, தானியங்கள் அதிகமாக விளைந்து செல்வச் செழிப்பு இருக்குமானால், பல தொழில்கள் துவக்கப்பட்டு, வருவாய் பெருகும். தொழில்களை நடத்திச் சென்று வருவாய் பெருக வழிவகைகள் செய்வது ஆட்சியாளர்கள் கடமை என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதே மாதிரி பிளாக் டெவலப்மெண்டு பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அரசாங்கமே அதைப்பற்றி ஆலோசித்து வருகிறது. அங்கே எத்தனையோ தவறுகளெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. நான் ஏதோ சில குறைகளை மட்டும் கூறுவதாக எண்ணாமல், ஆக்க பூர்வமான சில அபிப்பிராயங்களையும், உற்பத்தியைப் பெருக்குவதற்கு இன்றியமையாத சில அபிப்பிராயங்களையும், யோசனைகளையும் என்னுடைய அனுபவத்தைக் கொண்டு சொல்லுவதற்கு விரும்புகிறேன். அதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். அம்மோனியம் சல்பேட் உரவகைகள் பற்றாக்குறையைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 8.15 லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உரங்கள் நமக்குத் தேவைப்படும் என்றும், 4.10 லட்சம் டன் மட்டுமே இந்திய அரசு ஒதுக்கக் கருதியுள்ளது என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. நாம் என்ன சொன்னாலும், அவர்களால் கூடக் கொடுக்க முடியாது. இந்திய அரசின் பொருளாதார ஆலோசகர் திரு. பி. எஸ். லோகநாதன் அவர்கள் முன்பு ஒரு அரிய யோசனையை சமர்பித்திருக்கிறார்கள். நமது நாட்டில் எரிக்கப்படுகிற சாணம் இருக்கிறதே, அதை நல்ல முறையில் உபயோகப்படுத்தாமல் ஒவ்வொரு ஆண்டும் 12 மில்லியன் ஏக்கருக்குப் போதுமான அளவுக்கு நைட்ரஜன் சத்து வீணாகின்றது என்ற அறிக்கையை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். வீணாகப் போகக்கூடிய சாணத்தை நல்ல முறையில் உபயோகப்படுத்துவதன் மூலம் வீட்டிற்கு வேண்டிய எரி பொருள் முழுவதும் அதிலிருந்து பெற்றுக்கொண்டு, அம்மோனியம் சல்பேட் உரம் தேவையில்லாத அளவுக்கு, நாட்டிலே உள்ள பூமிக்கு அதை இயற்கை உரமாகக் கொள்ளலாம். இதன் மூலம் உற்பத்தி பெருகும். செயற்கை உரத்தினால் பூமியின் தரம் குறைந்துவிடுகிறது. நான் கூறுகிற யோசனை என்னவென்றால், எரிப்பதற்கு சாணத்தை உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக, காஸ் ப்ளாண்ட் என்ற ஒரு சிறிய கருவியைச் செய்து சாணத்தையும், தண்ணீரையும் கலக்கி அதில் ஊற்றி வைத்தால் அதன் மூலம் போதுமான அளவுக்கு காஸ் கிடைக்கும். அது வீட்டிற்கு எரிபொருளாகவும் அமையும். அதனால் சாணத்தின் எருத்தன்மை ஒன்றுக்கு இரண்டு மடங்காக அதிகமாகும். இந்த யோசனையைத் தகுந்த முறையில், தகுதியுள்ளவர்களை, நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

நான் தகுந்த ஆதாரத்தோடுதான் சொல்கிறேன். சாணியைக் கலக்கி யந்திரத்தில் இடுவதால், இரண்டுமடங்கு சாணியாக அது மாறுகிறது. எரிபொருளும் கிடைக்கிறது. இந்த மாதிரிச் செய்தால்—இன்றைக்கு ஏழையானவர்கள் மிளகாய்ச் செடியையும் மற்றவற்றையும் எரிபொருளாக உபயோகிக்கிறார்கள்—அதைத் தடுக்க முடியும். அவற்றையும் இன்னும் மற்ற கழிவுப்பொருள்களையும் கம்போஸ்ட் செய்து நல்ல முறையில் விவசாயத்திற்கு எருவாக உபயோகிக்க வசதியாக இருக்கக்கூடிய நிலைமையை



உருவாக்கலாம். அது நம் நாட்டிற்கு ஏற்றதாகவும் இருக்கும். இது அம்மோனியம் சல்பேட்டைவிட பன்மடங்கு சத்து உள்ளது. அழகுக்காக நான் பேசவில்லை. இருபது ஆண்டுகளாக நான் செய்வதைத்தான் சொல்லுகிறேன். சென்ற வாரத்தில் கனம் உணவு அமைச்சர் கோவைக்கு வந்திருந்த போது, கூட்டத்திலே நான் சொன்னேன். தயவுசெய்து என் பண்ணையை வந்து பாருங்கள் என்றேன். எத்தனையோ முன்னேற்றங்கள் நாம் காண வேண்டும். நகர் புறங்களிலும், கழிவுப் பொருள்கள், மலம் இவற்றை நல்ல காஸாக மாற்றி, எரிபொருளாக மாற்றினால், பன்மடங்கு நன்மை ஏற்படும்: எருவும் கிடைக்கும். மழையில்லையே என்கின்ற குறைகூட இராது. அதிலிருந்து மின்சக்தியைக் கூடப் பெறமுடியும். வாயளவில் நான் சொல்லவில்லை. என்னுடைய சின்னத் தொழிற்சாலையில், அங்குள்ள 'ஃப்ளாண்ட்'-இல் கிடைக்கும் பொருளால், ஃபர்னஸ் ஆயில் எரிவதற்கு வேண்டிய காசை எடுத்துக் கொள்கிறேன். அதில் மல நாற்றம் போய், எருத்தன்மை இருப்பதைக் காண்கிறேன். அப்படியெல்லாம் முன்னேற்றமான காரியங்களைச் செய்தால் நம் நாட்டில் சோற்றுப் பஞ்சம் தீரும். இதற்கெல்லாம் என்போன்றவர்களுடைய சிறு சிறு ஆலோசனைகளையும் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். ஏ.டி.டி. 27 ரகம் உயர்ந்ததுதான்—சந்தேகம் இல்லை. அதைப் பருவம் அறியாமல் செய்ததால் பலர் கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். விதை விநியோகத்தில் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது விவசாய இலாகா ஒரு அறிக்கை விட்டிருக்கிறது. அதன்படி, இந்த ஏ.டி.டி. 27 ஏக்கருக்கு, 18 கிலோ நெல்லை 12 சென்ட் நிலத்தில் விட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். என் அனுபவத்தைச் சொல்லுகிறேன். அவ்வளவு தேவையில்லை. அவர்கள் சொல்லும் 18 கிலோவிற்குப் பதில், 8 கிலோ அல்லது அதிகம் போனால் 9-க்கு மேல் வேண்டியதில்லை. அதை ஏழையானவர்கள் 18 என்று சொல்லும்போது, 28 அல்லது 30 கிலோ நெல்லைக்கூட விதை விரயம் செய்துவிடுகிறார்கள். அந்த வகையில் சாவியும் அதிகமான அளவில் சேதமாகிறது. சிக்கனமாகச் செய்தால் எத்தனை லட்சம் ஏக்கர்களுக்காவது கொடுக்கலாம். சேதமாகும் நெல்லை வைத்துக்கொண்டே நம் உணவுப் பஞ்சத்தை ஒரளவு போக்கிக் கொள்ளலாம். விவசாயிகள் அறியாமையால் அதிகமாக நெல்லைச் சேதம் செய்துவிடுகிறார்கள்.

இவை ஒன்றையும் நான் வாயால் சொல்லவில்லை: காரியத்தில் அனுபவத்தில் கண்டதைத்தான் சொல்லுகிறேன். இதில் அக்கறையுள்ளவர்களை ஜில்லாக்களிலிருந்து, தகுதியுள்ளவர்களை, அடுத்த மாதம் நான் நாற்றங்கால் விடும் சமயத்தில் அனுப்பினால், அவர்களை என்னுடைய செலவில் வைத்துக்கொண்டு சிக்கன முறையை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட என்போன்றவர்களுடைய ஆலோசனை

யையும் கணித்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு, நாட்டின் நல்வாழ்விற்கு வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. எல். கணேசன்** : மதிப்பு மிக்கத் துணைத்தலைவர் அவர்களே, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற தமிழக அரசு தயாரித்து அளித்துள்ள முதல் முழு நிதி நிலை அறிக்கையின்மீது நடக்கும் விவாதத்தில் நானும் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பினையும், இப்படிச் சீரான, செம்மையான நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து அளித்திருக்கும் அரசுக்கும், அதனுடைய தலைவர் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கும் வாய்ப்பினையும் அளித்த தங்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் உரிமைப்படுத்திக் கொள்ளுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை முற்போக்கானதாக இருக்கிறது. அதே நேரத்திலே முன் எச்சரிக்கை உள்ளதாகவும் இருக்கிறது. தீவிரம் இருக்கிறது; அதே நேரத்திலே நிதானமும் இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை முரண்பட்ட நலன்களையுடைய மோதிக் கொள்கின்ற இரண்டு வர்க்கங்களுக்கிடையே இவ்வரசு ஏழை பட்டாளி வர்க்கத்தின் சார்பில் இருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது; அதே நேரத்திலே வகுப்பு பேதமும், வர்க்க பேதமும் அற்ற சமுதாயத்தை— classless and casteless society ஐ உருவாக்க வேண்டுமென்ற துடிப்பு இவ்வரசிற்கு உண்டென்பதை இந்நிதி நிலை அறிக்கை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இன்னும் சொல்லப் போனால், நான் அறிந்த வரையில், தமிழக சட்ட மன்றத்திலேயே இதுதான் முதல் முதல் சமர்ப்பிக்கப்பட்ட சோஷலிச நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது என்கிற காரணத்தால் இதை நான் மனமார, உளமார வரவேற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் கோடிட்டுக் காட்டப் பட்டு, நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட விருக்கின்றன. காங்கிரஸ்காரர்கள் ஆட்சி செய்த காலத்தில் அவர்கள் செய்யத் தவறிய பலவற்றை இவ்வரசு துணிவோடு செயல்பட முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. அவற்றை வரவேற்காமல் இருக்க முடியாது. புஞ்சைக்கு நிலவரியை ரத்து செய்கிறார்கள். கல்லூரியில் புகுமுக வகுப்பிற்கு இலவசமாக்கியிருக்கிறார்கள். பேருந்துகளை தேசியமயமாக்க துணிச்சலோடு முன்வந்த இந்த அரசைப் பாராட்ட யாரும் தவற மாட்டார்கள். அதே போல, மின் விசை வினியோக உரிமையையும் தேசியமயமாக்க திட்டத்தை வைத்திருக்கிறது. கலப்பு மணத்தை ஊக்குவிக்க சில திட்டங்களைத் தயாரித்திருக்கிறார்கள். வேளாண்மைக்கு முதலிடம் கொடுத்து பல நல்ல திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். பின்தங்கிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக அக்கறை எடுத்துக் கொண்டு இருக்கிறது. சென்னை நகருக்குக் குடி தண்ணீர் அளிக்கவும், கூவம் ஆற்றைத் தூய்மைப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டு இருக்கிறது. இதையெல்லாம்விட



சீரணி அமைத்து மக்களுக்கு உதவிசெய்யத் தயாராகியுள்ளது. அதற்குப் பல திட்டங்களை வைத்திருக்கிறது. அதே நேரத்திலே, சிலவற்றை மறந்துவிடக் கூடாது என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். பேருந்துப் போக்குவரத்தை தேசியமயம் ஆக்க வேண்டும் என்று சொல்லும் போது, கடந்துபோன சர்க்கார் ஏற்படுத்தி விட்டவற்றால் ஏற்பட்டுள்ள விளைவுகளை மனதில் கொள்ள வேண்டும். கடந்துபோன சர்க்கார் சோஷலிசப் பாணியில் பேசி வந்ததே அன்றி செயலில் எதையும் செய்யவில்லை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்—அதில் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. கடந்த கால சர்க்கார் பல நிறுவனங்களில் நட்டக் கணக்குக்காட்டி, அதற்குக் காரணம் ஊழலோ அல்லது நிர்வாகத் திறமையின்மையோ அன்றி சர்க்கார் தேசியமயமாக்கத் திட்டமிடுகிறது என்றாலே மக்களுக்கு அதிலே வெறுப்பு ஏற்படும் நிலைமைகளை உருவாக்கி விட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது அரசு தேசியமயமாக்கும் நேரத்தில் அந்த நிர்வாக இயந்திரத்தை நல்ல முறையில் செயல்படும் வண்ணம் திருத்தி அமைக்க வேண்டும். அதை எந்த அளவில் செய்ய முடியுமோ அந்த வகையில் செய்து நிர்வாக இயந்திரத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்கிற கருத்தைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கலப்பு மணத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, அதைப் பாராட்டும் வகையில், பரிசுகள் அளிக்கும் வகையில் நிலைமைகள் இருக்கின்றன என்று அறிகிறேன். காங்கிரஸ்காரர்கள், தங்களுக்கே உரித்தான வகையில்; நாங்களும் செய்திருக்கிறோம்; சொல்லியிருக்கிறோம் என்றார்கள். உண்மையாகவே சொல்ல போனால், இந்த ஜாதி பேதத்தை ஒழிக்க; வர்ணாசிரம முறையை ஒழிக்க நெஞ்சில் துணிவும் நேர்மைத் திறனும் யாருக்கும் இருந்ததில்லை. காந்தியார் கூட தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார்களே தவிர, தீண்டாமையின் மூலமாகிய வர்ணாசிரம முறையை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதாக நான் அறிந்ததில்லை. ஆகவே, முதன் முறையாக; இந்தச் செயலைச் செய்திருக்கும் இந்த அரசை எல்லோரும் பாராட்டி வரவேற்கவேண்டும் என்கிற என்னுடைய கருத்தைத் தெரியப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். கலப்புத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் இருந்தாலும், சில சந்தர்ப்பங்களிலே இருதரப்பினருக்கும் சமுதாயத்தின் பாதுகாப்பு மறுக்கப் பட்டுவிடுகிறது. இரு பெரும் ஜாதிக்காரர்களும் இவர்களைப் புறக்கணிக்கிறார்கள். ஆகவே, பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதை உணர்ந்தால், விருப்பம் உள்ளவர்கள் துணிவாக முன்வருவார்கள். சமுதாயப் பாதுகாப்பை இழக்கும் நிலைமை இருப்பதால் விருப்பம் உள்ளவர்களும் முன்வர அஞ்சுகிறார்கள். ஆகவே, சமுதாயம் மறுக்கும் பாதுகாப்பை அரசு அளிக்க முன்வருமானால் நிச்சயமாக இந்தத் திட்டம் வெற்றிப் பெறும் திட்டமாக அமையும். இந்தப் பரிசு அளிக்கின்ற திட்டத்தை, பாராட்டுகின்ற திட்டத்தை; காலப் போக்கில் பாதுகாப்புத் திட்டமாக மாற்றினால் நிச்சயமாக, மெல்ல மெல்ல, உறுதியாக ஜாதீய முறையை நாம் போக்க முடியும் என்று நான் மனதார நம்புகிறேன். குறைந்த பட்சத் தகுதி உடையவர்களிடையே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள்

[திரு. எல். கணேசன்] [1967 ஜூன் 20

இருப்பார்களானால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முதல் சலுகை கொடுக்கப்படும் என்று பிரகடனப்படுத்தலாம். இதனால் நிர்வாகத் திறமைக் குறைவு ஏற்பட்டுவிடாது. அதே போல், கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்கள்; அவர்கள் எதிர்பாராத விதமாக இறந்துவிடுவார்களானால், அவர்களுடைய குழந்தைகளைப் பாதுகாக்கின்ற முழுப்பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ளலாம். இப்படிப் பல வகையான ஏற்பாடுகளைச் செய்து தருவோமானால், பாதுகாப்பு அளிப்போமானால் நிச்சயமாக ஜாதிய முறை மாற்றியமைக்கப்படும்.

இந்த நாட்டில் வேறு பல மதங்கள் பரவிய நேரத்தில், யாரும் அந்த மதத்தின் உயர்வினைக் கருதி அதில் சேர்ந்துவிட்டதாக நான் அறியவில்லை. மாறாக, அதிலே சேருவதனால் பொருளாதார துறையில் பல லாபங்கள் இருந்தன; வேறு பல பாதுகாப்புகளும் அளிக்கப்பட்டன என்ற காரணத்தால், அந்த நிலைமை இந்த நாட்டில் உருவெடுத்தது. அதேபோல்; நாம் ஜாதிய முறையை—வருணாசிரம முறையை—போக்குவதற்கு மக்களுக்கு பாதுகாப்பு அளிப்போமானால் நிச்சயமாக அந்தத் திட்டம் வெற்றி பெறும் என்பதனை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், முன்னாள் ஆளுங்கட்சியிலும், இன்னாள் எதிர்க் கட்சியிலும் இருக்கும் நண்பர்கள் கருத்து அறிவிக்கின்ற நேரத்தில். சிரமணி அமைப்பைப்பற்றிக் பல சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் வெளியிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில், நான் சொல்லுவேன்—முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவே அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்—நிச்சயமாக. பொது மக்களுடைய ஆர்வம் மிக்க ஒத்துழைப்பும், நல்லாதரவும் இல்லையென்றால், எந்த அரசும் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர முடியாது. சாலைகளை எடுத்துக் கொள்ளுவோமானால், கிராமப் புறங்களில் உள்ள மக்கள் ஓய்வு நேரத்தை வீணாகக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். சாலையமைப்பில் கணிசமான ஒரு பகுதி மண் வேலைக்கென்று செலவிடப்படுகிறது. அந்த மண் வேலையைச் செய்வதற்கு அதிகத் தொழில் நுட்பம் தேவை இல்லை; சாதாரண உடல் உழைப்பே போதுமானதாகும். கிராம மக்களே ஒன்று திரண்டு, மண் வேலையைச் செய்து கொடுத்தால் நிச்சயமாக நிரம்பப் பலன் கிடைக்கும். அதேபோல், பிற துறைகளைக் குறித்தும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நல்ல ஆக்கப் பணிகளை நாட்டு மக்களிடையே நாம் பெற முடியும். இதைக் குறித்துச் சொல்லுகிற போது, காங்கிரஸ் நண்பர்கள், எங்கோ இருக்கிற செங்காவல் படையைப்பற்றிச் சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்ப்பதற்கு அரசு இதைப் பயன்படுத்தக் கருதுகிறது என்று சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், கட்சியை வளர்ப்பதற்கு ஆயிரம் வழிகள் அதற்குத் தெரியும். இந்த அரசினுடைய உதவியைக் கொண்டு தான் கட்சியை வளர்க்கவேண்டும் என்ற நிலை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை.



1967 ஜூன் 20] [திரு. எல். கணேசன்]

கல்லூரி வரையிலும் இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் என்னுடைய கருத்தை மிக தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால அரசு நிறையப் பள்ளிகளைத் திறந்தது என்பதும் கல்லூரிகளைத் திறந்தது என்பதும் எல்லோருக்கும் தெரியும். கல்வியை அளித்தது உண்மை தான். ஆனால், அந்தக் கல்வியை அளித்துப் பட்டதாரிகளை உருவாக்கியதே தவிர; வேலை வாய்ப்பைத் தேடித் தருகிற கல்வியாக அது இருந்ததில்லை. எனவே, வேலை வாய்ப்புக்கு வகை செய்யாமல் பட்டதாரிகளை மட்டும் உருவாக்கி; வேலை இல்லாத் திண்டாட்டத்தை அதிகம் பெருக்கிக் காட்டிற்று. எனவே, உடனடியாக அந்த வேலையில்லாத் திண்டாட்ட நிலைமையைக் குறைக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டு, பல வேலைகளை முந்தைய அரசு உருவாக்கியது. அப்படி வேலை வாய்ப்புகளை உருவாக்கியதே தவிர, அந்த வேலைகளிலிருந்து உற்பத்தி பெருகவில்லை. வெறும் விரயமான வீணான செலவைப் பெருக்கிக்கொண்டதே தவிர, நிர்வாகச் செலவைப் பெருக்கிக் கொண்டதே தவிர உற்பத்தியை அது பெருக்கத் தவறிவிட்டது. எனவே, இப்போதும் நாம் கல்வியை அளிக்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில் வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய கல்வியாகவும் அது இருக்க வேண்டும். வேலை வாய்ப்பு இருக்க வேண்டும். அந்த வேலை வாய்ப்பு வெறும் விரயச் செலவுக்கு இடம் கொடுக்கக்கூடாது; உற்பத்திக்கும் வழி வகுக்க வேண்டும். உற்பத்தி இருக்க வேண்டும்; உற்பத்தி தேசீய வருமானத்தைப் பெருக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அந்த உற்பத்தி நல்ல முறையில் விநியோகிக்கப்பட்டு, சமுதாயத்தின் பல்வேறு நிலைகளிலே பகிர்ந்து அளிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். எனவே, இது வெறும் கல்விப் பிரச்சினையாக மட்டும் இல்லாமல், பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாக, ஒட்டுமொத்தமான; முழுமையான கண்ணோட்டத்தைச் செலுத்தி, இந்த வகையிலே நாம் சில அமைப்புக்களைச் செய்தாக வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளைப் பணிவோடும், கனிவோடும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தத் திட்டத்திற்கு முதல் இடம் தந்திருக்கிறார்கள். அதைப் பொறுத்த வரையில், தமிழகத்து மக்கள் நிச்சயமாக நூற்றுக்கு நூறு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நீர்ப்பாசனத்திற்கும் மின்சார விஸ்தரிப்புக்கும் என்று 40 சதவீதம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். சிறு பாசனத்தைப் பொறுத்த வரையில், தஞ்சை மாவட்டத்தில் நிரம்ப இடம் இருக்கிறது. அதைத் தவிர, வேறு எந்த வழியும் இல்லை. குளம், ஏரி மராமத்துக்கள் போன்ற சிலவற்றைத்தான் செய்ய முடியுமே தவிர, மீண்டும் மேட்டூர் நீர்த் தேக்கத் தண்ணீரை எதிர்பார்த்து அங்கே ஒன்றும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பது நிச்சயமாக தஞ்சைப் பகுதி மக்களால் வரவேற்கப்படும் என்று நான் சொல்லிக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், அரசு முற்போக்கு அரசா? பிற்போக்கு அரசா? என்பதை வரையறுப்பது வருவாயை வகுத்துக் காட்டித் திருப்திப் படுவது மட்டுமல்லாமல், அதே நேரத்தில், அதனுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ளு வதற்கு எடுத்துக்கொள்ளுகிற நடவடிக்கையும் ஆகும். நிச்சய மாக, வரியின்றி அரசு நடக்காது. ஆனால், அதே நேரத்தில், அரசு யார் மீது வரி விதிக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்த அரசினுடைய நிலைமையை நாம் உணர்ந்துகொள்ள முடியும். தாங்கக் கூடியவர்கள் மீது—குறிப்பாகச் சொல்லபோனால் மேல்மட்டத்திலே உலவிக் கொண்டிருக்கிற மக்கள் மீது—வரி விதிப்பது எந்த வகையிலும் தவறாக இருக்க முடியாது. விதிக்கப் படுகிற பொருட்களைப் பார்க்கும்போது, ஆடம்பரப் பொருட்களின் மீது வரி விதித்திருக்கிறார்கள். அதை யாரும் தவறு என்று சொல்ல முடியாது. அதேபோல் அறிக்கையிடப்பட்ட பொருள் கள் மீது வரி விதித்திருந்தாலும், அது நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடும் என்றாலும், அதிலேயும் விலக்கு அளித்து இருக் கிறார்கள்; பருத்தி; பருத்திப் பொருள்களுக்கு விலக்கு அளித்திருக் கிறார்கள்; அதேபோல, ஒரு முனை வரி விதிக்கப்படும் பொருள் களுக்கு வரி விதித்திருந்தாலும், அந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட பொருள்கள் நிரம்ப இருக்கின்றன. எனவே, வரி விதிப்பு நிச்சயமாக ஏழைகளைப் பாதிக்காத வகையில், அதே நேரத்தில், மேல் தட்டிலே தங்கிவிட்டிருக்கிற உயர்ந்த வர்க்கத் தினரைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதுதான் அதிலுள்ள சிறப் பான அம்சமாகும். தாங்க முடியாத ஏழைகள் மீது மீண்டும் வரியை சுமத்துவது எந்த வகையிலும் நியாயமாகாது. அது மட்டுமல்ல. இப்படி ஏற்றத்தாழ்வை உருவாக்கிக்கொண்டு போனால், நிச்சயமாக ஒரு காலத்தில் எங்கோ கொண்டு நிறுத்தும். எனவே, இப்போதே இதுபோன்ற நடவடிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஈடுபடுவதை மனப்பூர்வமாக நான் வர வேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நிதி நிலை அறிக்கையை விமர்சிப்பதற்கு முன்னால், நான் ஒன்று நினைத்தேன். 'நான் சட்ட மன்றத்திற்குப் புதியவன். திராவிட முன்னேற்றக் கழகமோ பொறுப்புக்குப் புதிது. எனவே, பழகியவர்களிடம், பயிற்சி பெற்றவர்களிடம், அனுபவமுள்ளவர் களிடம் பாடங்களைப் பயிலலாம்' என்று கருதினேன். ஆனால், துரதிருஷ்டவசமாக, காங்கிரஸ் நண்பர்கள் பேசியதைப் பார்க்கும் போது, அத்தகைய உயர்ந்த படிப்பினை அவர்களிடமிருந்து எனக்குக் கிடைக்கவில்லை என்பதை அறிகிறபோது நாம் மெத்த வருத்தப்படுகிறோமே தவிர, வேறு ஏதும் சொல்லுவதற்கில்லை. எனவே, இந்த அரசு தயாரித்து அளித்திருக்கிற அறிக்கையை உளமார வரவேற்று என்னுடைய உரையை முடிக்கின்றேன், வணக்கம்.





*ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை குறித்து, நான் சார்ந்துள்ள இந்திய தேசீய மைனாரிடி சமுதாயத் தின் பிரதிநிதித்துவக் கட்சியான முஸ்லீம் லீக்கின் சார்பில் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலைத் தமிழக அரசிற்கு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

'ஒன்று இறை மக்களெல்லாம் ஒன்று நிறை' என்ற உயர்ந்த உலகளாவிய தத்துவத்தை இந்த உலகத்திற்கு இறைவன் தருவ தற்குக் கருவியாகத் தேர்ந்த எடுக்கப்பட்டிருக்கின்ற, கண் பிறருக்கு அளிக்கின்ற கண்ணாளர், நற்குணத்தின் தாயகம், நபிகள் நாயகம் பிறந்த பொன்னாளை இந்தத் தமிழக அரசு பொது விடுமுறை நாளாக ஆக்கியிருப்பதற்கான பெருமையை, இந்த நாட்டிலே வாழ்கின்ற முப்பது லட்ச முஸ்லிம் களுடைய சார்பில் நான் மனமாரப் பாராட்டுகிறேன். (ஆரவாரம்.)

இருநூறு ஆண்டுக்காலம் இந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டு வந்த வெள்ளைக்காரர்களால் தரப்பட்டிருந்த ஒரு சலுகை யை, அந்த வெள்ளைக்காரர்களுடைய இடத்திலே இருந்து சென்ற இருபதாண்டுக் காலமாக ஆண்டு கொண்டிருந்த, மதிப்பிற்குரிய பழைய ஆட்சியினர், மைனாரிடி சமூகத்தினர், தங்களது உயிரினும் மேலாக நேசிக்கின்ற ஒரு உத்தமரின் பிறந்த நாளுக்கு அளித்த விடுமுறையை இல்லாமல் செய்துவிட்டார்கள். அந்த இல்லாமல் செய்துவிட்ட ஒரு நிலையை இல்லாது ஆக்கியிருக்கின்ற இந்த ஆட்சிக்கு நான் மனப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

'அதே நேரத்தில், தமிழக அரசினுடைய நிதி நிலை அறிக்கையில், நம்முடைய நாடு—இன்பத் தமிழ்நாடு—விவசாயத்தை அடிப்படை யாகக் கொண்டிருந்த நாடு என்ற அடிப்படையில், விவசாயப் பிரச்சினைக்கு முக்கியத்துவமும் முதல் இடமும் கொடுத்திருக்கிறது என்பதை நினைக்கின்றபோது உண்மையிலேயே இந்த நாட்டிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுடைய சார்பிலெல்லாம் நான் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய தமிழக அரசு, இந்த நாட்டிலேயுள்ள ஏழை எளிய மக்கள் எல்லாம் வாங்கி உண்ண முடியாத அளவில் உணவுப்பொருள்களின் விலை ஏறிவிட்டதைத் தடுத்து நிறுத்தும் வகையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தைக் கொண்டுவந்தது. இந்தத் திட்டத்தின் காரணமாக புதிதாக ஏற்படுகின்ற நட்டத்தை ஈடுகட்ட மத்திய அரசிடம் முறையாக மானியமாகப் பெறவேண்டு மென்று அணுகியது. நமது மாநில அரசு மானியம் இல்லை என்றதும் கடனாகவாவது தரவேண்டுமென்று கேட்டது. அதற்கும் முடியாது என்று சொல்லிவிட்டதும் நீங்கள் தந்திருக்கின்ற கடனுக்கான வட்டியையாவது சிறிது காலத்திற்குத் தள்ளிப் போடுங்கள், ஏழை எளிய மக்களுக்கு உதவிட இது ஒரு

வாய்ப்பாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டபோதும்கூட மத்திய அரசு இவர்களின் முறையீட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. மாநில அரசுக்கு உற்ற நேரத்தில் உதவாதது மத்திய அரசின் தவறான போக்கையே காட்டுகிறது. 1950-ம் ஆண்டில் நம்முடைய நாட்டின் கடன் 12 கோடியே 30 லட்சம்தான். ஆனால் நம்முடைய நாட்டின் ஆட்சி பீடத்தில் புதியதோர் ஆட்சியினர் அமருகின்ற நேரத்தில் நம்முடைய அரசு, மத்திய அரசாங்கத்திற்கு வட்டியாக கொடுக்க வேண்டியது 14 கோடி ரூபாய் என்ற நிலையை ஏற்படுத்தியிருந்தார்கள். ஆட்சி மாறும் நேரத்தில் நம்முடைய கடன் 300 கோடி ரூபாய். 1950-ல் கடனே 12 கோடியாக இருந்தது. ஆனால் இப்பொழுது வட்டி கட்டுவது மட்டும் 14 கோடி ரூபாயாக இருக்கின்றது. நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்கு உதவும்படி அரிசி திட்டத்திற்கு உதவி செய்ய எந்த ஒரு திட்டத்தையும் ஏற்காமல் மத்திய அரசு செயல்பட்டு வருவது நாட்டின் ஒருமைப் பாட்டிற்கு உகந்த ஒரு செயலாகாது! கடந்த பதினைந்து ஆண்டுகளில் விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் பெயரால் செலவழித்தது, முறையாகச் செலவழிக்கப் பட்டிருக்குமானால் இன்று உணவுப் பொருள்களின் தட்டுப்பாடும், பற்றாக்குறையும், விலையேற்றமும் இல்லாமல் செய்திருக்க முடியும். ஆனால் சென்ற கால ஆட்சியினர் அதைச் செய்யத் தவறிவிட்டனர்.

தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தர முன்வந்துள்ளது. என்னுடைய மாவட்டமாகிய திருநெல்வேலி மாவட்டத்தில் 12-ம் தேதி நடந்த விவசாயக் கருத்தரங்கில் மாண்புமிகு அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் அவர் கலந்துகொண்டபோது நாங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் பச்சையாறு அணைக்கட்டுத் திட்டத்தை செயல்படுத்தினால் அதிகப்படியான உணவுப்பொருள்கள் உற்பத்திக்கு ஆக்கந்தரும் திட்டமாக அமையும் என்று கூறினோம். கடந்த பதினைந்து ஆண்டு காலமாக நாட்டை ஆண்டு வந்தவர்களிடம், நாங்கள் சொல்லிக்கொண்டிருந்தபோதெல்லாம், பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் காலத்தைக் கழித்துவிட்டுப் போனார்கள். விவசாயக் கருத்தரங்கில் நாங்கள் பச்சையாறு திட்டத்தைப் பற்றிச் சொன்னவுடனே, "இது பயன் உள்ள திட்டம் என்று தெரிந்தால், உடனே செயல்படுத்த ஆரம்பிக்கிறோம்" என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மறுநாள் அதிகார வட்டத்தினரோடு பரிசீலனை செய்து பச்சையாறுத் திட்டம் ஏற்புடைய திட்டம் என்று ஏற்றுக்கொண்டார். அந்தத் திட்டத்தினால் பத்தாயிரம் ஏக்கர் நிலங்கள் முப்போகங்கள் விளையும் என்று கூறி, பத்திரிகையாளர்களுக்கு அறிக்கை கொடுக்கின்றபோதுகூட நல்ல திட்டமாக இருப்பதால் ஏற்று நடத்துங்கள் என்று கூறியிருக்கிறார்கள். இதனால் எங்களது மாவட்டத்து மக்கள் மனநிறைவு அடைகிறார்கள். சென்ற கால ஆட்சியினர் இதை உரிய காலத்தில்





செய்திருப்பார்களானால் திருநெல்வேலி மாவட்டம் உணவுப் பொருள் பற்றாக்குறை மாவட்டமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் வளர்ச்சி அடைந்திருப்பதில் கோவை மாவட்டத்திற்கு முதலிடமும், அடுத்த இடம் மதுரை மாவட்டத்திற்கும்; அதன் பின்னர் திருச்சி மாவட்டத்திற்கும் கிடைக்கின்றது. உணவுப்பொருள் உற்பத்தி செய்து தருகின்ற தஞ்சை மாவட்டமும்; நெல்லை மாவட்டமும் தொழில் துறை வளர்ச்சியில் பின் தங்கியுள்ளன எனலாம். எங்களது மாவட்டம் எந்த அளவிற்குத் தொழில் துறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சென்ற ஆட்சியில் எங்களது மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களது தனி வாழ்க்கையை —செல்வாக்கை— வளர்த்துக்கொள்ள அந்தப் பிரதிநிதித்துவ முறையைப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்று தெரிகிறது. மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழில் துறை அபிவிருத்திக்கு அவர்கள் எந்த அளவுக்குப் பாடுபட்டார்கள் என்று தெரியவில்லை. எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாசரத் பேட்டை, தூத்துக்குடி, பாளையங்கோட்டை, சாயர்புரம், ஆழ்வார்க்குறிச்சி, கோயில்பட்டி, செங்கோட்டை ஆகிய பகுதிகளில்தான் தனியார் துறைகளில் கல்லூரிகள் இருந்து வருகின்றன. ஆனால் அவை அனைத்தும் கலைக்கல்லூரிகளே! சர்க்கார் துறையைப் பொறுத்தவரையில் மருத்துவக் கல்லூரி சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எங்களது மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரி இந்தப் புதிய அரசினால் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயத்திற்கு நாம் முதலிடம் கொடுக்கின்றபோது ரசாயன உரங்கள் நல்ல முறையில் வினியோகிக்கப்பட வேண்டும். சென்ற ஆட்சியில் உர வினியோக முறை சரியாக இல்லை. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு கார்டு மூலம் உர சப்ளை செய்தால் நல்லமுறையில் உற்பத்தி பெருகும். விவசாயிகளில் பலர் தங்களுடைய பெயருக்குக் குத்தகைச் சீட்டு இல்லாமல் இருக்கிறார்கள். நிலத்தின் பட்டா யாருடைய பெயருக்கு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் கார்டு என்ற நிலைமை இருக்குமானால், உண்மையில் நிலத்தில் பாடுபடுகின்ற விவசாயிகளுக்குக் கார்டு கிடைக்காத நிலைமை ஏற்பட்டு அவர்கள் அந்த உரத்தை விவசாய அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். உண்மையாகவே யார் நிலத்தில் விவசாயம் செய்கிறார்களோ, அவர்களுடைய பெயருக்கு கார்டு கொடுக்கும்படியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

சேலம் உருக்காலைத் திட்டத்தைப்பற்றி நண்பர் எம். எஸ். மணி அவர்கள் சென்ற சட்டமன்றத்தில் பேசும்போது, சேலம் உருக்காலைத் திட்டம் வருமா, வாராதா என்று கேட்டபோது,

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1967 ஜூன் 20

'எந்தச் சேலத்தைப்பற்றிக் கேட்டீர்கள்? தமிழ்நாட்டில் இருக்கின்ற சேலமா? அல்லது அமெரிக்காவில் இருக்கின்ற சேலமா? என்று பதில் கொடுத்தார்கள். அப்படிப் பதில் கொடுத்தவர்கள் இந்த மன்றத்தில் இல்லை. சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்றும்படி மத்திய அரசிடம் நம் முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். சேலம் உருக்காலையை ஏற்படுத்தினால் குறைந்த முதலீட்டில் அதிகமான ஆதாயம் கிடைக்கும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான வழிவகையும் இருக்கிறது. உருக்காலை ஆரம்பிக்கப்படுகின்றபொழுது கனிப்பொருள்களும், எரிபொருள்களும், சுண்ணாம்புக்கற்களும் ஆலைக்குப் பக்கத்திலே கிடைத்தால் உருக்கு உற்பத்தியின் செலவு குறைந்துவிடும். நிறைந்த லாபம் கிடைக்கும். துர்க்காபூர் உருக்காலைக்கு 881 மைல்; ரூர்கேலாவுக்கு 880 மைல்; பொகாரோ 842 மைல்; ஜம்ஷெட்பூரிலுள்ள டாடா உருக்காலைக்கு 592 மைல் தூரத்திலேயிருந்து கனிப்பொருள்கள் வர வேண்டியிருக்கின்றன. ஆனால் நெய்வேலியில் கிடைக்கின்ற பழுப்பு நிலக்கரியையும் சேலத்தில் கிடைக்கின்ற உருக்கையும் கொண்டு இரும்புத் தொழிற்சாலை ஆரம்பித்தால் 159 மைல் தூரத்திலிருந்துதான் கனிப்பொருள்கள் வரவேண்டியிருக்கின்றன. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும் என்று தஸ்தூர் கமிட்டியினர் தன்னுடைய ஆராய்ச்சியில் தெரிவித்திருக்கிறார்கள். சேலம் இரும்பு உருக்காலையைப்பற்றி நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. செழியன் அவர்கள் விவரமான புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அமைக்கப்பட இருக்கிற சேலம் உருக்காலை அமைந்தால் குறைந்த விலையில் உருக்கு கிடைக்கக் கூடிய நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு அன்னிய நாட்டுச் செலாவணி இல்லையென்று கூறுவார்களானால், ஜப்பானிலிருந்து வந்திருக்கிற ஒரு கம்பெனி, தானே அந்நிய நாட்டுச் செலாவணி ஏற்பாடுசெய்து கொள்வதாகக் கூறியுள்ளது. அதனால் சேலம் உருக்காலையை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் குறித்து அப்பகுதிய எல்லாக் கட்சி உறுப்பினர்களும், தொழிற்துறை விற்பன்னரும் கொண்ட ஒரு சிறப்புக்குழு அமைத்திடலாம் என்ற கருத்தும்; தகுதியான காரணம் போதுமான அளவுக்கு இருந்தும், மத்திய அரசு சேலம் திட்டத்தைப் புறக்கணித்து வந்திடும் போக்கை மாற்றிட, கண்டனம்; கிளர்ச்சி; பதவித் துறப்பு போன்ற முறைகளை உள்ளடக்கிய ஒரு 'செயல் திட்டம்' எல்லாக்கட்சியின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளலாம் என்று அறிஞர் அண்ணா
பிற பகல். 1-30 அவர்கள் கூறுவதில் கண்டனம் செய்வதை ஏற்றுக்கொள்கிறோம்; கிளர்ச்சி செய்யவேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் பதவித் துறப்பு என்பது நாம் சிந்துப்பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது.



1967 ஜூன் 20]

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேரம் ஆகிவிட்ட காரணத்தினால்; தம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** இன்னும் இரண்டு மூன்று நிமிடங்கள் அனுமதிக்க வேண்டும்.

பதவித் துறப்பு என்பது நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. இந்த இருபது ஆண்டுகால ஆட்சியில் அதுவும் நம்மவர்களே நம்மவர்களை ஆண்டார்கள் என்று சொல்கிறபோது ஏற்பட்டுள்ள இழப்பு இருக்கிறதே அது 200 ஆண்டுகால வெள்ளையர் ஆட்சியில்கூட ஏற்படவில்லை. தாய்மார்கள் தங்கள் தாலியைத் துறந்தும் பச்சிளம் குழந்தைகள் தங்கள் உயிரைப் பறிகொடுத்தும்—பெற்றது இந்த ஆட்சி மாற்றம்! பறவைகளுக்கும் மிருகங்களுக்கும்கூட 'சுடக்கூடாது' என்று தடை செய்யப்பட்டுள்ள பாதுகாப்புச் சரணாலயம் இருக்கிறது. ஆனால் நம்முடைய குழந்தைகளையும் மாணவர்களையும் சென்ற ஆட்சியினர் சுட்டு வீழ்த்திய கொடுமையை நாம் மறக்க முடியாது. அவர்கள் தியாகத்தின் மூலம் கொடுத்த விலையினால் தான் நாம் இந்த நிலையைப் பெற்றிருக்கிறோம். இன்று நியாயமான முறையில் நமக்குக் கொடுக்க வேண்டிய ஒத்துழைப்பை மத்திய அரசு அளித்தால் சரி, இல்லையென்றால் நாம் பதவியைத் துறக்காது, அவர்கள் பதவியைத் துறந்து ஓடுகின்ற அளவில், நம்முடைய செயல்முறைத் திட்டங்களை நாம் வகுத்துக்கொண்டாக வேண்டும் என்பதாகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நோக்கில் மதிப்பிற்குரிய ஆசைத்தம்பி அவர்கள் பேசும் போது ஆதித்திராவிட மக்களுக்கு ஜனத்தொகை விகிதாசார அடிப்படையில் உத்தியோகத்துறையில் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆம்! அப்படிச் செய்ய வேண்டியதுதான். உலகம் ஏற்றுக்கொண்ட தத்துவத்தை சாதி பேதமற்ற சமத்துவ சமதர்ம தத்துவத்தை, வர்ணாசிரம பேதமற்ற ஒரு கொள்கையை, எல்லோருக்கும் எல்லாம் என்ற ஏற்றம் மிகுந்த தத்துவத்தை ஒரு சமயத்தின் பேரால் செயல்பட்டுவரும் முஸ்லிம்களாகிய நாங்கள் சென்ற கால ஆட்சியாளரின் அராஜகத் திற்குக் துணை போகவில்லை என்ற காரணத்தினால் கடந்த கால ஆட்சியில் எங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன—மறுக்கப்பட்டுள்ளன. ஜன விகிதாசார அடிப்படையில் பொறியியல் கல்லூரியில், மருத்துவக் கல்லூரியில், உத்தியோகத் துறையில் எங்கள் சமூகத்திற்கு அளிக்கப்படவேண்டிய நியாயமான இடம் அரசியல் குரோதங்கள் காரணமாக எங்களுக்கு கிடைக்கவில்லை! நமது மாநிலத்திலே 30 லட்சம் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். ஜனநாயக மறுமலர்ச்சியைத் தோன்றச் செய்துகொண்டு ஆட்சி பீடத்தில் ஏறியிருக்கிற அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலே—

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1967 ஜூன் 20

எங்களுடைய விகிதாசார அடிப்படையில் நியாயமானமுறையில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி உத்தியோகத் துறையில் இடம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது அருமைத் தலைவர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதேமில்லத் அவர்கள் அரசியல் சட்டம் உருவாக்கப் படும்பொழுது எவ்வாறு மத்திய ஆட்சியின் அதிகாரங்கள் குவிக்க படுகின்றன, மாநில ஆட்சியின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருக் கின்றன—அதுவும் இந்தி ஏகாதிபத்தியத்திற்கு பிறமொழிகள் அடிமையாக்கப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டார்கள். மாநில ஆட்சியின் உரிமையைப் பறித்து, மத்திய ஆட்சியினர் அதிகாரங்களைக் குவித்துக்கொண்டே போனால்—இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை இழந்துவிடக்கூடிய நிலைமை ஏற்படலாம் என்று எச்சரிக்கிறேன். மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அத்தனை அதிகாரங்களும் கொடுக்கப்பட்டாக வேண்டும். அதிகாரம் இப்படி மாநிலங்களிடையே பரவலாக்கப் படுவதன் மூலமாகத்தான் இந்த நாட்டின் ஒருமைக்கும், ஐக்கியத்திற்கும் பாதுகாப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உணர்ச்சி கடந்த இருபது ஆண்டு களாகப் பதவியில் இருந்தவர்களிடம் காணப்பட்டிருந்தால் மத்திய ஆட்சியின் கை இவ்வளவு ஓங்கி ஓங்கிப் போய்க்கொண்டிருந் திருக்காது. நம் நிலை இவ்வளவு தாழ்ந்து போய் இருக்காது. இந்த நிலையை மாற்றுவதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் முன்வந்திருப் பதைப் பாராட்டுகிறேன். மிக உயர்ந்து இருந்தவர்களை கீழே இறக்கி, மிக கீழ் நிலையில் உள்ளவர்களை மேலே ஏற்றி—சமநிலைப் படுத்தும் முறையில் உயர்ந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித் துள்ளதைப் பாராட்டுகிறேன். "பொழுது புலர்ந்தது யாம் செய் தவத்தால், புன்மை இருட் கணம் போயின யாவும் ஆதவன் உதித் தான்" என்று திருப்பள்ளி எழுச்சி பாடினார் பாரதியார். அராஜக ஆட்சியை ஆட்சிப் பீடத்தில் இருந்து அகற்றவேண்டும் என்ப தாக நாம் செய்த தவத்தால்—பொழுது புலர்ந்தது. ஏகாதிபத்திய —அராஜக ஆட்சியின் புன்மை இருட்கணம் போயின. எல்லோருக் கும் ஒளி அளிக்க, ஏற்றம் அளிக்க ஆதவன் எழுந்தனன். நல் ஆட்சி மலர்ந்தது. நாட்டு மக்கள் அனைவருக்கும் அறிஞர் அண்ணா நல் வாழ்வு பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில், பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில் பெருமையோடும், பூரிப்போடும் பாராட்டுவதோடுகூட அறிஞர் அண்ணா அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் பாராட்டையும் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

பிற்பகல் 1–34 மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: மன்றத்தின் நிகழ்ச்சி கள் இன்று இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் 22–6–1967 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சட்டப்பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

194. *Notification issued with G.O. Ms. No. 534, Revenue, dated the 8th March 1967, making an amendment to the Revenue Department Notification II-1 No. 1303 of 1965, dated the 20th March 1965, published at page 526 of Part II Section 1 of the Fort St. George Gazette, dated the 24th March 1965.* [*Laid on the Table of the House under section 26 (2) of the Madras (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Madras Act 30 of 1964).*]

## B. Reports, Notification and Other Papers.

*Nil.*

64998
360
263
D 1
V211, 31 N67
N67-2-3